யாழ்ப்பாணம்

★ டில்லியில் புதிய சுற்றுப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன

# இன்று கூட்டணி; நாளை போராளிகளுடன்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான புதிய சுற்றுப் பேச்சு வார்த்தைகளை தமிழ் அமைப்புக்களுடன் இந்திய மத்திய அரசாங்கம் இன்று ஆரம்பிக்கவுள்ளது. இதன் முதலாவது அம்சமாக தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களுடன் மத்திய அரசு அதிகாரிகள் இன்று பேச்சு வார்த்தைகளை நடாத்தவுள்ளார்கள். நாளையும், நாளை மறுதினமும் ஏனைய தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களுடன் மத்திய அரசு அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளை நடாத்துவார்கள். டிசெம்பர் 19 ஆம் திகதிய யோசனைகள் இன்னமும் செயலில் இருப்பதாக இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் தெரிவித்ததையடுத்தே இப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன. இனப்பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகள் தொடர

—6 ஆம் பக்கம் பார்க்க

விலை ரூபா 1-25 REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 170 திங்கள் 18 - 05 - 1987 ( வைகாசி 04 ) நர்ழான் 19

★ குறிஞ்சாத்தீவு வரை வீதி ஓரங்களில் ராணுவம் பதுங்கிக் கிடக்கிறது

# யாழ்ப்பாணத்துக்குள் நுழைய ஆனையிறவு ராணுவம் தயார்!

## கண்டிவீதி சகல போக்குவரத்தும் ரத்து!

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை வெளியேறிய இராணுவத்தினர் தொடர்ந்தும் குறிஞ்சாதீவு — புளியடிப்பகுதியில் தங்கியுள்ளனர். நேற்று அதிகாலை வேளை ஆனையிறவு முகாமின் வடக்குப் பக்கமாக பெருமளவு இராணுவத்தினர் பதுங்கிப் பதுங்கி வெளியேறி கண்டி வீதியில் குறிஞ்சாத்தீவு புளியடி பகுதியை அடைந்தனர். அங்கிருந்து கண்டி வீதி வழியாக வடக்கு நோக்கி மேலும் முன்னேற முடியாத நிலையில் நேற்று மாலை வரை இராணுவத்தினர் அப்பகுதியின் இருமருங்கிலும் பதுங்கியும், தரையில் படுத்தவாறும் நிலை கொண்டிருந்தனர்.

இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னேறும் பட்சத்தில் அவர்களுடன் சேர்ந்துகொள்ளும் பொருட்டு பெருமளவு இராணுவத்தினரும், பலகவச வாகனங்களும், பீரங்கிகள் பொருத்தப்பட்ட ட்ரக்வண்டிகளும் நேற்றுக் காலைமுதல் ஆனையிறவு இராணுவ முகாமில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை கண்டி வீதி வழியே இராணுவத்தினர் வடக்கு நோக்கி முன்னேறுவதை தடுக்கக் கூடியவிதத்தில் போராளிகள் பலத்த எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் கண்டி வீதியில் குறிஞ்சாத்தீவுப்பகுதியில் நிலைகொண்டிருப்பதினால் ஆனையிறவு ஊடான வாகனப் போக்குவரத்துக்கள் நேற்றுக் காலைமுதல் முற்றாகத் தடைப் பட்டுள்ளன. நேற்றுக்காலை தென்பகுதியில் இருந்து வந்த சில வாகனங்கள் ஆனையிறவு தடைமுகாமை தாண்டி யாழ்ப்பாணம் வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தன

எனினும் தடைமுகாம் இராணுவத்தினரின் அனுமதி உடன் வந்த வான் ஒன்றின் மீது குறிஞ்சாத்தீவில் வீதியோரத்தில் பதுங்கி இருந்த இராணு

—6 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவத்தைக் குவிப்பதற்கு இந்திய அரசு கண்டனம்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் தரை, கடல், ஆகாய மார்க்கமாக இராணுவத்தினரை அதிகளவில் குவிப்பதற்கு கடந்த சில நாட்களாக அரசாங்கம் எடுத்து வரும் முயற்சியை இந்தியா கண்டித்துள்ளது.

தமிழர்கள் அதிகளவில் வாழும் யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படையினரை குவிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சி தமிழ்ப் பகுதிகளில் அமைதியின்மையை ஏற்படுத்தவே உதவும் என இது குறித்து இந்திய அரசாங்கத்தினால் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த முயற்சி குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளது.

## ஹெலிகப்டரின் சூட்டுக்கு லொறியும், வீடும் சேதம்

(எழுதுமட்டுவாழ்)

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் புலோப்பளைப் பகுதியில் ஹெலிகப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் லொறி ஒன்றும் வீடொன்றும் பலத்த சேதமடைந்தது.

பலாலியிலிருந்து ஆனையிறவுக்குச் சென்று கொண்டிருந்த ஹெலிகப்டரே திடீரென தாழப்பறந்து தோட்டமொன்றில் தேங்காய் ஏற்றிக்கொண்

—6 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ யுத்த விமானங்களை பாக். வாங்கும்

பாகிஸ்தான் அமெரிக்காவிடம் இருந்து நவீன ராடர்கள் பொருத்தப்பட்ட கண்காணிப்பு போர் விமானங்களை

—6 ஆம் பக்கம் பார்க்க

## கோட்டை சென்றி சிப்பாய் போராளியின் சூட்டுக்கு பலி

கோட்டை இராணுவமுகாமில் சென்றியில் இருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி மரணமானார்.

ஜி. எஸ். கீர்த்திபால என்ற இந்த சிப்பாய் போராளிகளின் சென்ரியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே மரண

—6 ஆம் பக்கம் பார்க்க

## ஈ. பி. ஆர். எல். எப்பிலிருந்து புளட்டிலிருந்து பிரிந்தவர் சென்னையில் புதியமுன்னணி

(சென்னை)

தடைசெய்யப்பட்டுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ. பி. ஆர். எல். எப்], தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் [புளொட்] ஆகிய இயக்கங்களிலிருந்து பிரிந்து சென்ற குழுவினர் ''இலங்கை தேசிய ஜனநாயகவிடுதலைமுன்னணி'' என்ற பெயரில் கூட்டமைப்பொன்றை சென்னையில் ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது.

போராளிகள் அமைப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே இவ் அமைப்பின் நோக்கமென இதன் பிரமுகர்

—6 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் போர் நிறுத்தம் கேட்கிறார் அமிர்தலிங்கம்

(சென்னை)

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அரசபடைகளின் விரோத மனப்பான்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இலங்கையை இந்தியா கோர வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு அதிகாரிகளுடன் இன்று பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக டில்லி புறப்படு முன்னர் செய்தியாளர்களிடம் சென்னையில் பேசுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

—6 ஆம் பக்கம் பார்க்க

ஆயுதங்களை கீழே போட்டால்

## ஜே.வி.பிக்கு மன்னிப்பு வழங்க பிரதமர் பிரேமதாஸா தயார்!

மக்கள் விடுதலை முன்னணி ஆயுதப் போராட்டத்தை விட்டு ஜனநாயக முறையில் செயற்பட முன்வந்தால் அக் கட்சியின் மீதான தடை நீக்கப்பட்டு, கட்சியின் உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என பிரதமர் பிரேமதாசா அறிவித்துள்ளார். நேற்று வெலியத்த தொகுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே பிரதமரால் அரசாங்கத்தின் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

'மக்கள் விடுதலை முன்னணியினர் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு தமது கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவை பெற ஜனநாயக அரசியலில் பிரவேசிக்க வேண்டும். இந்த வேண்டுகோளை அவர்கள் ஏற்பார்களாயின் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தினால் அனுமதிக்கப்படும்' எனவும் அவர் தெரிவித்தார்.

—6 ஆம் பக்கம் பார்க்க

## 27-ம் திகதி முடிவுநாள்

திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் 'தொழில்நுட்பவியல் டிப்புளோமா', 'புடவைத்

—6 ஆம் பக்கம் பார்க்க

# முரசொலி கேடயத்துக்காக

## ஜொனியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்திய கிரிக்கெட் போட்டியின் விபரமான முடிவு

முரசொலி வெற்றிக் கேடயத்துக்காக ஜொனியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்திய ஆறுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கிருஸ் ஹொப்பர்ஸ் (பச்சை) விளையாட்டுக்கழகம் முரசொலி கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. யாழ். ஜொனியன்ஸ் (கறுப்பு) விளையாட்டுக் கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது. மேற் குறிப்பிட்ட விபரங்களும் விசேட விருதுகள் பெற்றவர்கள் பற்றிய விபரங்களும் நேற்றைய வாரமுரசொலியில் வெளியிடப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற் தடவையாக ஆறு வீரர்களைக் கொண்டு கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்ட சாதனை இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியின் கால் இறுதிப் போட்டிகளின் விபரம் வருமாறு:-

1 றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும் (சிவப்பு) இடையே நடைபெற்றபோட்டியில் கொக்குவில் அணி வெற்றி பெற்றது. கொக்குவில் அணியினர் ஒரு விக்கட் இழப்புக்கு அறுபத்தாறு ஓட்டங்களைப் பெற்றனர். சி. மகேந்திரகுமார் ஆட்டம் இழக்காமல் நாற்பத்தொரு ஓட்டங்களையும், உமா சங்கர் ஆட்டம் இழக்காமல் பதினெட்டு ஓட்டங்களையும் பெற்றனர். றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் பதினெட்டு ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெய்சங்கர் ஆட்டம் இழக்காமல் ஏழு ஓட்டங்களைப் பெற்றார்.

2. கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழகத்திற்கும் (மஞ்சள்) யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் (சிவப்பு) இடையே நடைபெற்ற போட்டியில் ஜொனியன்ஸ் வெற்றி பெற்றது. கொக்குவில் நான்கு விக்கட்டுக்கு அறுபது ஓட்டங்களைப் பெற்றது. விஸ்வநாத், கோகுலன் ஆகியோர் முறையே இருபத்தாறு, பத்து ஓட்டங்களையும், நந்த தயாளன் ஆட்டம் இழக்காது பதின்மூன்று ஓட்டங்களையும் பெற்றனர். ஜெயக்குமார் இரண்டு ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுக்களை கைப்பற்றினர். ஜொனியன்ஸ் ஒரு விக்கட் இழப்புக்கு அறுபத்திரண்டு ஓட்டங்களைப் பெற்றது. முரளீதரன், கணேஷ்பஞ்சன் ஆகியோர் ஆட்டம் இழக்காது முறையே இருபத்தொன்பது, இருபத்தாறு ஓட்டங்களைப் பெற்றனர்.

3. யங் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் ஜொனியன்ஸ் (கறுப்பு) விளையாட்டு கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஜொனியன்ஸ் வெற்றி பெற்றது. ஜொனியன்ஸ் மூன்று விக்கட் இழப்புக்கு முப்பத்தாறு ஓட்டங்களைப் பெற்றது. நேசகுமார் ஆட்டம் இழக்காமல் பதினைந்து ஓட்டங்களைப் பெற்றார் விவேகானந்தன் ஆறு ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுக்களை வீழ்த்தினார். சென்றலைட்ஸ் மூன்று விக்கட்டுக்களை இழந்து இருபத்தொன்பது ஓட்டங்களைப் பெற்றது. விக்னேஸ்வரன் ஆட்டம் இழக்காமல் பதினொரு ஓட்டங்களைப் பெற்றார்.

4 கனகரட்ணம் விளையாட்டுக் கழகத்திற்கும் கிருஸ் ஹொப்பர்ஸ் (பச்சை) விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கிருஸ் ஹொப்பர்ஸ் வெற்றி பெற்றது. கனகரட்ணம் வி. க. நான்கு விக்கட்டுகளுக்கு இருபத்தைந்து ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரூனி பதினொரு ஓட்டங்களைப் பெற்றார். கிருஸ் ஹொப்பர்ஸ் இரண்டு விக்கட்டுகளுக்கு இருபத்தாறு ஓட்டங்களைப் பெற்றது. ரேகான் இராஜசிங்கம் ஆட்டம் இழக்காமல் பதின்மூன்று ஓட்டங்களை பெற்றார் சுமந்திரன் மூன்று ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுகளை வீழ்த்தினர்.

அரைஇறுதி பேட்டி முடிவுகள்:

1 கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும் (சிவப்பு), ஜொனியன்ஸ் (கறுப்பு) கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஜொனியன்ஸ் வெற்றிபெற்றது. கொக்குவில் மூன்று விக்கட்டுக்கு முப்பத்தேழு ஓட்டங்களைப் பெற்றது. சதீஸ்குமார் இதில் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றார். ஜொனியன்ஸ் மூன்று விக்கட்டுக்களுக்கு நாற்பது ஓட்டங்களைப் பெற்றது. தேவபாலன் பத்து ஓட்டங்களையும், குலநாதன் ஆட்டம் இழக்காமல் இருபத்தொரு ஓட்டங்களையும் பெற்றனர்.

2 ஜொனியன்ஸ் (சிவப்பு) விளையாட்டுக் கழகத்திற்கும் கிருஸ் ஹொப்பர்ஸ்(பச்சை) விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கிருஸ் ஹொப்பர்ஸ் வெற்றி பெற்றது. கிருஸ் ஹொப்பர்ஸ் ஒரு விக்கட்டை மட்டும் இழந்து அறுபது ஓட்டங்களைப் பெற்றது இதில் ராஜசிங்கம், தர்மராஜா ஆகியோர் ஆட்டம் இழக்காமல் முறையே இருபத்திரண்டு, இருபத்தொரு ஓட்டங்களைப் பெற்றனர் ஜொனியன்ஸ் சகல விக்கட்டுகளையும் இழந்து முப்பத்தொன்பது ஓட்டங்களையே பெற்றது. ஆ. வாகீசன் இருபத்தைந்து ஓட்டங்களைப் பெற்றார். செல்வராசா ஏழு ஓட்டங்களுக்கு இரண்டு விக்கட்டுகளை வீழ்த்தினர்.

இறுதிப்போட்டி முடிவு:

இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் (கறுப்பு) சழகமும் கிருஸ் ஹொப்பர்ஸ் (பச்சை) கழகமும் மோதின. முதலில் ஜொனியன்ஸ் துடுப்பெடுத்து ஆடி ஐந்து ஓவர்களிலும் நான்கு விக்கட்டுக்களை இழந்து நாற்பத்தேழு ஓட்டங்களைப் பெற்றது. அணியின் தலைவர் க. சூரியகுமார் பத்து ஓட்டங்களையும் அணியின் விக்கட்காப்பாளர் ரீ. தேவபாலன் ஆட்டம் இழக்காமல் இருபது ஓட்டங்களையும் பெற்றனர். தர்மராஜ 11 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டை எடுத்தார். அடுத்து விளையாடிய கிருஸ் ஹொப்பர்ஸ் 4.2 ஓவர்களில் இரண்டு விக்கட்டுகளை மட்டுமே இழந்து நாற்பத்தொன்பது ஓட்டங்களைப் பெற்றது. தர்மராஜா பத்தொன்பது ஓட்டங்களைப் பெற்றார். பொன் பீலியஸ். சிவசங்கர் ஆகியோர் ஆட்டம் இழக்காமல் முறையே பதினாறு, பத்து ஓட்டங்களைப் பெற்றனர்.

இதன் மூலம் முரசொலி வெற்றிக் கேடயத்தை கிருஸ் ஹொப்பர்ஸ் (பச்சை) அணி பெற்றுக்கொண்டது. இரண்டாம் பரிசுக்கான வெற்றிக் கிண்ணத்தை ஜொனியன்ஸ் (கறுப்பு) அணி பெற்றுக் கொண்டது.

முரசொலி வழங்கிய விசேட விருதுகள் பெற்றோர் விபரம்:

1. சிறந்த துடுப்பெடுத்தாளர் சி. மகேந்திரகுமார் (கொக்குவில் மத்திய வி. க.)

2. சிறந்த பந்து வீச்சாளர் ஏ. அருட்செல்வம் (கனகரட்ணம் வி. க.)

3. சிறந்த பந்து தடுப்பாளர் என். சிவசங்கர் (கிருஸ்ஹொப்பர்ஸ்—பச்சை-வி. க.)

4. ஆகக்கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணி: கொக்குவில் மத்திய(சிவப்பு வி.க.).

---

கிரிக்கெட்
போட்டி
புகைப்படங்கள்
வெகுவிரைவில்
முரசொலியில்
பிரசுரமாகும்
பகல்நேர
மின்வெட்டு
காரணமாக
இன்று
பிரசுரமாக
முடியாது
போனமைக்கு
வருந்துகிறோம்.

★ பிரதம ஆசிரியர்

---


## சுதந்திரச் சிறுவிளம்பரம்

### சேவை

பிடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், பாம் முட்டைகள் இவ் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். சீமாட்டி சுமங்கலி, 531, பலாலி வீதி, திருநெல்வேலி. 05046

### ஏலவிற்பனை

கோப்பாய் பொதுச் சந்தையில் இம் மாதம் 22ம்- 23ம், 24-ம் திகதியில் வீட்டுத்தளபாடங்கள்- கடைத்தளபாடங்கள்-லவ் பேர்ட்ஸ் -கூடுகள்- முயல் முதலிய பல பொருட்கள் ஏலத்தில் விற்பனையாகும். லக்கிபெனிபிட்கோ. லிமிட்டட் கோப்பாய். 05054

### வெற்றுச் சாக்கு விற்பனை

இச்சங்கத்தில் 3000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 10/- மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்திப் பெறும் கேள்விப் பத்திரங்களை, மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- சங்கத்தில் செலுத்தி, பதிவுத் தபால் மூலம் 23 . 05 . 87க்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

கரவெட்டி,
11 . 05 . 87.

பொது முகாமையாளர்,
கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

05034

# இடமாற்ற அறிவித்தல்

எமது காரியாலயம் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாதுகாப்பான இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை எமது ஆதரவாளர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தருகிறோம்

மதுரா வீடியோ கிளப், இல. 96, 4ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்

என்ற முகவரியிலிருந்த எமது நிறுவனம் தற்போது

**97/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**

என்ற முகவரியில் அமைந்துள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய நேரம்

**காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை**

★ குவைத் ★ சவூதி
★ ஓமான் ★ டோகா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும், கடித மூலம் தொடர்பு கொள்ளவிரும்புவோர் முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ளவும்.

எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகல விதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் கடவுச்சீட்டு (PASSPORT) குறைந்த செலவில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

HORIZON Enterprises

**A. பத்மதாஸ்**

இல. 97/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

05043

குறிப்பு: எமது முகவர் நிலயத்தின் பெயரைக்கொண்டு வடபகுதியில் பல மோசடி பேர்வழிகளிடம் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர். எனவே மீண்டும், மீண்டும் நாம் கூறிக்கொள்வது எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது. தொடர்பு கொள்வோர் நேரில். அல்லது கடிதமூலம் மட்டுமே தொடர்பு கொள்ளுங்கள். எந்தக்காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

## நலவாக்கு

துன்பம் வரும்போது அதற்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவர்.

—திருவள்ளுவ நாயனார்

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23007, 23008

# இதயநாதம்

## இராணுவ இலக்கு தமிழர் படுகொலைதான்!

''யாழ்ப்பாணத்திலுள்ள குடிமக்கள் விரைவில் தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறிவிட வேண்டும்.''

இப்படியான ஒரு எச்சரிக்கைப் பிரசுரம் ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசு அரசாங்கத்தினால் வெளியிடப் பெற்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு நவீன இயமனைக் காட்சிதரும் ஹெலிகப்டரிலிருந்து இந்தப் பிரசுரம் ஆயிரக் கணக்காக அள்ளி வீசப்படுகிறது.

தர்மிஷ்ட ஆட்சி புரியும் அதிஉத்தம ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களே பாதுகாப்பு அமைச்சராகவும் விளங்கும் இன்றைய அரசாங்கத்தின் ஆயுதப்படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மக்களுக்கு நேரடியாக இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

நாம் முன்னர் பல தடவைகள் இப்பகுதியில் குறிப்பிட்டது போல, இவ்வாறான ஒரு அறிவித்தல் இதுதான் முதற்தடவையாக விடுக்கப்பட்டதல்ல.

யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தென்னிலங்கையிலுள்ள தங்களின் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றுவிடவேண்டும் என்று 1985 ஏப்ரல் பருவ விடுமுறையின் போது அமைச்சர் அத்துலத்முதலி அறிவித்திருந்ததை நாம் மறந்துவிடவில்லை.

யாழ்ப்பாண மக்களை இங்கிருந்து வெளியேற்றும் முயற்சிக்கு ''நமோ நாராயண'' போட்டவரே இவர்தான்.

காலத்துக்குக் காலம் இவ்வாறான பயமுறுத்தல் பல்வேறு கோணங்களிலிருந்தும் எமது மக்களை நோக்கி வெளிவந்துள்ளது.

ஆனால் இப்போது வந்திருக்கும் எச்சரிக்கைப் பிரசுரம் ''குதிரையின் வாயிலிருந்து'' என்று கூறப்படும் ஆங்கிலப் பழமொழிக்கு ஒப்பானதாகும்.

யாழ்ப்பாண மக்கள் மீது ஷெல்லையும், குண்டுகளையும் யார் வீசுகின்றார்களோ அவர்களே வானத்திலிருந்து இப்போது இந்தப் பிரசுரத்தை வீசியுள்ளனர்.

எனவே இதனை வெறும் விளையாட்டாக நாம் கருதி விடக்கூடாது

குடாநாட்டைச் சுற்றிக் காத்திருக்கும் கடற்படைக் கப்பல்களும், குடாநாட்டின் எல்லைப் பிரதேசங்களில் குவிக்கப்பட்டிருக்கும் புதிய ராணுவத்தினரும், அணி அணியாகக் காத்திருக்கும் நவீன ராணுவ வண்டிகளும் எமக்குப் புரியவைப்பது தெரியாத விடயமல்ல.

எப்படியாவது குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பொதுமக்கள் மனைகளை இலக்குப் பார்த்து தாக்குதல் நடத்தும் கொலை வெறியர்கள் ஏனோ மனமிரங்கி முன்னெச்சரிக்கைப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்களை வீடுகளைவிட்டு வெளியேறுமாறு கூறியவர்கள், பளை பொதுச் சந்தையிலும் பஸ் நிலையத்திலும் கூடிநின்ற மக்கள்மீது நேற்று முன்தினம் மூர்க்கத்தனமான வெறித்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

மக்களைக் கூட்டமாகத் திரளச் செய்து ஒரு எறியில் பல உயிர்களைப் பலியெடுப்பதற்காகத்தான் இப்படியான அறிவிப்பை விடுத்தார்களா?

வயோதிபப் பெண்கள், ஆண்கள் உட்பட சுமார் பதினைந்து அப்பாவி மக்கள் ஹெலி சுட்டதனால் மரணமாக நேர்ந்தது.

அதேநேரத்தில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு மேலாக பறந்த ஹெலியொன்று, அங்கு விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்ததையும், ஆயிரக் கணக்கில் மாணவர்கள் கூடி நின்றதையும் நன்கு கவனித்த பின்னரும் தாக்குதல் நடத்தியுள்ளது.

தெய்வாதீனமாக ஷெல் வெளியே வீழ்ந்ததால் ஒருவரும் காயம்கூட அடையவில்லை.

கோயில்கள், பாடசாலைகள், பொதுச் சந்தைகள், பஸ் நிலையங்கள் போன்ற மக்கள் கூடுமிடமெங்கும் வானத்திலிருந்து தாக்குதல் நடத்தப்படுவது வழக்கமாகிவிட்டது

திருமண ஊர்வலம், மரண ஊர்வலங்கள்கூட விதிவிலக்காகவில்லை.

இதன் மூலம் ஒரு விடயம் நன்கு தெரியவந்துள்ளது

தமிழ்ப்பகுதிகளிலுள்ள அப்பாவி மக்களைக் கொலை செய்வதே இஸ்ரேல் வழங்கியுள்ள ஆலோசனை.

இதனை நூற்றுக்கு நூறுவீதம் வெற்றிகரமாகச் செயற்படுத்த ராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ அனுரா பண்டாரநாயக்காவின்
பேட்டி: நேற்றைய தொடர்ச்சி

# அரசாங்கத்தின் சட்டங்கள்

# தெற்கிலுள்ள கட்சிகளுக்கே;

# புலிகளைக் கட்டுப்படுத்தாது!

வினா: ஆனால் மக்கள் இதே உணர்வுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வர் என நீங்கள் நம்பவில்லை.

விடை: சர்வஜன வாக்கெடுப்பு அறிக்கையை மிக அநேகர் இன்னமும் வாசித்துப் பார்க்கவில்லை. அந்த அறிக்கையை விட, ஆளும் ஆற்றல் இவ்வரசாங்கத்திற்கு இல்லை என்பதுதான் மக்களை மிக அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்பைக் கையாள்வதோடு அரசின் இந்த ஆற்றலின்மை நின்றுவிடவில்லை. அண்மையில் கொழும்பு புறக்கோட்டையில் நேர்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம் தொட்டு அவர்கள் தமது அலுவல்களை நடத்தியுள்ள விதத்திலிருந்தும் அவர்களுடைய கையாலாகாத்தனம் நன்கு தெரிகிறது.

தற்போது ஐ. தே. கட்சிக்குச் சார்பாக உள்ள இருமனங் கொண்ட வாக்காளர்கள் ஓர் உண்மையை நன்றாக உணர்ந்துவிட்டார்கள். இப் பிரச்சினையைத் தீர்க்கும் உத்தேசம் இவ்வரசாங்கத்திடம் இல்லை என்பதே அவ்வுண்மை.

பிரச்சினை தீராமல் இருப்பதால் நன்மை அடையும்ஒருவர் இருப்பாராகில், அது இந்த அரசாங்கமேதான்.

குறைந்தபட்சம் நிலைமையின் ஓர் அம்சமாவது எனக்கு மனநிறைவு ஏற்படுத்துகிறது. மாணவ சமுதாயம் எழுந்து நின்று அரசாங்கத்தைத் திருப்பிச் சாடுகிறது.

வினா: அவர்களின் பின்னணியில், ''அக்கறை கொண்ட சக்திகளின்'' தூண்டுதல் இருக்கும் என நீங்கள் கருதவில்லையா?

விடை: அப்படிச் சொல்வது நியாயமானதாகாது.

பிறருடைய ''கைப்பொம்மை''களாகச் செயற்படும் சிலர் இருக்கலாம் என நான் நினைப்பது உண்டு ஆனாலும் பெரும்தொகையானோர் அப்படியானவர்களல்லர்.

வினா: புறக்கோட்டை குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து அரசாங்கம் நடந்து கொண்ட விதத்தை நீங்கள் ஏன் கோடிட்டுக் காண்பிக்கிறீர்கள்?


விடை: 1987, மேதினத்தன்று இந்த ஐ. தே. க. அரசாங்கம் மேதினக் கூட்டங்களைத் தாக்கியது. ஜனாதிபதியின் கறந்தெனிய சொற்பொழிவு இன்னுமொன்று.

மே தினத்துக்கு வருவோமானால், ஒன்றுக்கொன்று ஒவ்வாத ஒரு நிலையை நாம் அங்கு காண்போம். அப்படிப்பட்டவற்றில் ஒன்று, இதோ: தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மூன்று மைல்கள் தூரம் நடைபவனியாக ஊர்வலம் வந்து கூட்டம் நடத்த வல்லோராக இருந்தனர். ஜன சமுத்திரத்தைக் கட்டுப்படுத்த வெளியே, தெரு வீதிகளிலே பொலிஸ்காரர் ஒருவர்கூட அன்று அடமையில் நிற்கவில்லை.

ஆகவே, சட்ட ஒழுங்குவிதிகள், ஒழுங்கு முறைகள் எனப்படும் யாவும் எமக்கு மட்டுமே-தெற்கிலுள்ள எதிர்க்கட்சியினருக்குமாத்திரமேமாணவர்களை அவர்கள் கையாண்ட விதமும் அரசின் இப்போக்குகளைக் குறிப்பாகச் சுட்டிக்காண்பிக்கின்றது.

இணக்கப் பேச்சுக்கள் மூலமான தீர்வுபற்றி பேசுவோர் கூடத் துரோகிகள் என, இலங்கைப் பிரதமரே கூறுகிறார்.

எமது ஜனாதிபதி இதற்கு என்ன செய்கிறார்? யாழ்ப்பாணத்தின்மீது போர் விமானங்கள் வெடிகுண்டு பொழிவதைப்பற்றி வெளிநாட்டுப் புதினப் பத்திரிகை நிருபர்களுக்கு எடுத்துச்சொல்லி, பிரதமர் சொன்னவற்றை நிரூபிக்கிறார் பற்றாக்குறைக்கு ஹிரோஷிமாவையும் நினைவுகூர்கிறார். அங்குதான் உலக வரலாற்றிலேயே இரண்டாவது உலகப் போர் முடிவில் ஒரேயொரு அணுகுண்டுத் தாக்குதல் நேர்ந்துள்ளது. இந்த அணுகுண்டு தாக்குதல் யப்பான் மீது அமெரிக்காவால் நடாத்தப்பட்டது. ஜனாதிபதி இங்கு ஒரு மெய்ம்மையை உணரத் தவறிவிட்டார்; இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போது அமெரிக்கர்களுக்கு எதிராக யப்பானியர் போர் புரிந்து கொண்டு இருந்தனர். ஆனால் இங்கு நிலைமை முற்றிலும்



வேறு. ஒரு நாடு தனது தேசத்திலேயே வாழும் தனது சொந்தக் குடிசனங்களுக்கு எதிராக போர்தொடுக்க இயலாது.

மேலும் யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை அரசு விமானத்திலிருந்து வெடிகுண்டு பொழிவது நின்று விட்டது. இந்திய நெருக்குதலின் கீழ் விமானம், ஹெலிக்கொப்டரிலிருந்து வெடிகுண்டு பொழிவது நின்றுவிட்டது என இலங்கை வெளியுறவு அமைச்சின் சிரேட்ட அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். (ஆயினும் உண்மை வேறு: விமானக் குண்டு வீச்சு யாழ்ப்பாணத்தின் மீது தொடர்ந்து ஏறத்தாழ அனுதினமும் நடாத்தப் பட்டுவருகிறது ஏன் 1987, மே மாதம் பதினோராம் திகதியன்று திங்கட்கிழமை மாலை கூட யாழ்நகர் மீது நடத்தப் பட்டது.)

உள்ளபடியாக, இலங்கை அரசாங்கத்தின் வார்த்தைகளை நம்புவோர் வரவரக் குறைந்துகொண்டே போகின்றனர்.

வினா: வட இலங்கையில் அரசாங்கத்தின் ஆயுதப் படைகளினால் தாக்குதல்கள் புரியப் படுகின்றனபோலத் தெரிகிறது.

விடை: தொடக்கத்தில் அது வெறுமனே ஓர் உபாயமாக மாத்திரம் இருந்தது. அதாவது, அரசாங்கம்ஏதோபெரும் காரியம் சாதிப்பதாகக் காட்டிக்கொள்ள ஜனாதிபதி விரும்பினார். இப்பொழுதோ அவர்கள் ஒன்றுமே செய்வதில்லை.

வினா: ஜனாதிபதியின் கறந்தெனிய சொற்பொழிவு பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

விடை: தற்போதைய நிலைமையைப் பயன்படுத்தி, பாராளுமன்றத்தினதும், ஜனாதிபதி எனும் வகையில் தமது சொந்தப் பதவியினதும் சட்டப்படி வலுவுடைய காலத்தை நீடித்துக்கொள்ளத் தாம் தயாராகிறார் ஜனாதிபதி.

அதைவிட, இன்னுமொன்றையும் அவர் வெளியிட்டிருந்தார். இப்போது அதனையிட்டு அவர் பச்சாத்தாபம், கழிவிரக்கம் கொள்வார் என எண்ணலாம். தற்போது அவர் கையில் ஆறில் - ஐந்து பாகப் பெரும்பான்மை வாக்குகள் உள்ளன. ''பி. ஆர்'' (ஆட்களின் பதிவு) முறைமையின் கீழ் மூன்றில்- இரண்டு பெரும்பான்மைகூட அவருக்குக் கிடையாது. ஆகவே, என்னிடம் ஏலவே உள்ள ஆறில்- ஐந்தை நான்ஏன் வீணே இழக்க வேண்டும் என ஜனாதிபதி கேள்வி கேட்டிருந்தார்.

நாட்டுக்கு நாடு ஆட்சி பீடம் அமர்ந்துள்ள அரசியற் கட்சிகள் எல்லாம் தாம் தாம் தேர்தலின் போது ஈட்டிக் கொண்ட பெரும்பான்மை வாக்குகளை ஏன் இழத்தல் வேண்டும் எனும் தோரணையில் சிந்தனையையும், அதன் வழி செயற்பாட்டையும், செலுத்தப் புறப்படுவார்களானால், உலகிலே எந்த நாட்டிலாவது தேர்தல்கள் நடைபெறப்போவதில்லை. 1977 ஆம் ஆண்டு எனது தாயார் அவ்வாறு நினைத்திருந்தாராகில், அவர் ஒரு பொதுத் தேர்தலை நடத்தி இருக்கவே மாட்டார்

வினா: ஒரு பொதுத் தேர்தல் நிகழும்பட்சத்தில் சிறீ. ல. சு. க. வுக்கு (உங்கள் கட்சிக்கு) எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்பதையிட்டு நீங்கள் ஒருவேளை அளவுக்கு அதிகமாக எதிர்பார்த்து நிற்கிறீர்கள் போலும்.

விடை: ஒரேயடியாக, எடுத்த எடுப்பிலேயே அனாயாசமாக நாம் வென்றுவிடப் போவதில்லை. தேர்தல் போராட்டம் வெகு உக்கிரமாக, சமனான யாரிகள் இருவர்க்கு இடையே நிகழ்வதுபோல, இருக்கும். எந்த ஒரு கட்சியுமோ மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை ஈட்டிக் கொள்ள இயலாதவாறு அமைந்திருக்கிறது. இந்தத் தேர்தல் முறைமை. பங்களிப்பில் அது ஒரு பகுதி. ஆனால் நாம் அதனை எதிர்த்து நின்றோம். அதனை மாற்ற இன்னுமொரு சர்வஜன வாக்கெடுப்புத் தேவை.

இன்று, பொதுத் தேர்தல் நடைபெற்றால் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி வெல்லும். அதையிட்டு எனக்கு பூரண நம்பிக்கையுண்டு. ஆனால் பெரும்பான்மை வாக்குகள் அதிகமானவையாக இருக்கமாட்டா. ஐ. தே. கட்சியை விட எமக்குக் கணிசமான தொகை அதிகப்படியான வாக்குகள் கிடைத்திருக்கும்.

ஆயினும் ஒரு ஜனாதிபதித் தேர்தலில், தற்போதையவர் படுதோல்வி அடைவார்.

—5 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள வெளிமாவட்ட ஆசிரியர்கள் விபரம்

நேற்றும் நேற்று முன்தினமும் ஒரு தொகுதி ஆசிரியர்களின் பெயர்கள் வெளிவந்தன. இன்று மிகுதிப் பெயர்கள் வெளியிடப்படுகின்றன.

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இடமாற்றலாகி வந்துள்ள 194 ஆசிரியர்களில் கோப்பாய் கல்வி வட்டார பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட இருபத்தைந்து ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு:

திரு பி. சரவணபவானந்தன் கம்பளை அல் முபாரக் மகா வித்தியாலத்தில் இருந்து யாழ். அத்தியார் இந்துக் கல்லூரிக்கு.

திரு. எஸ். குணராசா செளனி அ. த. க. பாடசாலையில் இருந்து ஊரெழு கணேஷ வித்தியாசாலைக்கு.

திரு. ஏ. மறைக்காடர் லெவன் இல 1 அ. த. க. பாடசாலையில் இருந்து இடைக்காடு மகா வித்தியாலயத்திற்கு.

திரு. ஆர். டீ. இராசேந்திரன், பன்புறே த வித்தியாலயத்திலிருந்து உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு.

திரு. ரீ பாலசுந்தரம் பண்டாரவளை தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து அத்தியார் இந்துக்கல்லூரிக்கு

திரு. கே. எஸ். பகவத்சிங்கம் சென். யோன் த.க. பாடசாலையில் இருந்து அச்செழு மெ. மி. த. க. பாடசாலைக்கு

செல்வி டி. செல்லத்துரை சென். பெனடிக்ற் த. க. பாடசாலையில் இருந்து புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்துக்கு.

செல்வி ஆர் வல்லிபுரம் சென். பெனடிக்ற் த. க. பாடசாலையில் இருந்து அச்சுவேலி சென். திரேசா வித்தியாலயத்துக்கு.

திரு. ஈ. குணசேகரன் மதவாச்சி முஸ்லிம் வித்தியாலயத்தில் இருந்து அத்தியார் இந்துக்கல்லூரிக்கு.

திரு. ஆர். கிருஷ்ணகுமார் விவேகானந்தா வித்தியாலயத்தில்இருந்து கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்துக்கு

திரு ஐ. சிவராசா வாழைச்சேனை த. வித்தியாலயத்தில் இருந்து புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்துக்கு.

திருமதி பீ. பூபாலரத்தினம் புதுக்குடியிருப்பு அ. த. க. பாடசாலையில்இருந்து புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரிக்கு.

திருமதிஎஸ்.விநாயகப்பிள்ளை திருமலை சென். யோசப் கல்லூரியில் இருந்து புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்துக்கு.

திருமதி ஏ. சுப்பிரமணியம் சென். பிரான்சிஸ் மகாவித்தியாலயத்தில் இருந்து ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயத்துக்கு.

திருமதி சி. பாலசுப்பிரமணியம் திருமலை சென். யோசப் கல்லூரியில் இருந்து புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்துக்கு

திரு கே. தவராசசிங்கம் அலம்பில் றோ. க. வித்தியாலயத்தில்இருந்து புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரிக்கு.

திருமதி கே. ஆனந்தராசா முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் இருந்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்துக்கு (திங்கள் புதன், வெள்ளி); அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு (செவ்வாய், வியாழன்).

திருமதி என். தம்பு விஸ்வமடு 2-ம் யூனிட் அ. த. க. பாடசாலையில்இருந்து ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்துக்கு.

திருமதி எஸ். அழ்வாப்பிள்ளை புதுக்குடியிருப்பு சி. த. க. பாடசாலையில் இருந்து அத்தியார் இந்துக்கல்லூரிக்கு.

திருமதி எஸ். சுந்தரம் கோவிற் புதுக்குளம் கனிஷ்ட அ. த. க. பாடசாலையில இருந்து உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயத்துக்கு

திருமதி எம். இராசகுலேந்திரன் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் இருந்து நடராசா இராமலிங்கம வித்தியாலயத்துக்கு.

செல்வி எஸ். சாரங்கபாணி இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் இருந்து ஊரெழு கணேஷ வித்தியாலயத்துக்கு.

செல்வி வை. காசிப்பிள்ளை கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில்இருந்து கோப்பாய் நாவலர் வித்தியாலயத்துக்கு.

திரு சே. சிறிஸ்கந்தராசா கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இருந்து அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்கு.

திரு டபிள்யூ. பரமநாதன் இரணைதீவு றோ. க. பாடசாலையில் இருந்து கோப்பாய் மகா வித்தியாலயத்துக்கு,

## சாவகச்சேரி கல்விவட்டாரம்

செல்வி எஸ். ஈ. சி. எஸ். அஞ்சலோ கடுகண்ணவ சீ. சி. த. வித்தியாலயத்தில் இருந்து மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்துக்கு.

திரு கி. வல்லிபுரநாதன் கதிரேசன் குமார வித்தியாலயத்தில் இருந்து மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு.

திருமதி எஸ். தர்மலிங்கம் புனித மரியாள் தமிழ் வித்தியாலயத்திலிருந்து உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு

செல்வி வி. விவேகானந்தன் புனித அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் இருந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு.

திரு. வி. தெய்வேந்திரமூர்த்தி ஒலுமடு அ. த. க. பாடசாலையில் இருந்து கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலைக்கு.

திருமதி என். மகாலிங்கம் விசுவமடு அ. த. க. பாடசாலையில் இருந்து வரணி மகாவித்தியாலயத்துக்கு.

செல்வி எம். வேலாயுதபிள்ளை விஸ்வமடு அ. த. க. பாடசாலையில் இருந்து மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்துக்கு.

திருமதி ஏ செல்வராசா இணுவகாய் அ. த. க. பாடசாலையில் இருந்து கல்வயல் ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்துக்கு.

திருமதி வி. பரமேஸ்வரன் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் இருந்து மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்துக்கு

திருமதி வி. ராமநாதன் செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் இருந்து மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு.

திருமதி ரீ. அருளானந்தம் புளியங்குளம் அ. த. க. பாடசாலையில் இருந்து சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு.

திருமதி எம். பாலசுப்பிரமணியம் நம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் இருந்து டிறிபேர்க் கல்லூரிக்கு.

செல்வி ஜே. கனகரத்தினம் புளியங்குளம் அ. த. க. பாடசாலையில் இருந்து சரசாலை கணேச வித்தியாலயத்துக்கு.

செல்வி வி. கணபதிப்பிள்ளை மன்னார் கௌரி அம்பாள் வித்தியாலயத்தில் இருந்து சந்திரமௌலி வித்தியாலயத்துக்கு.

திருமதி பி. சின்னப்பா நாவற்குழி நாட்டான் மகாவித்தியாலயத்தில் இருந்து கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு.

திருமதி எம். செந்தில்நாதன் பரந்தன் இந்துக் கல்லூரியில் இருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு.

திருமதி எஸ். கே. சிவபாலசுந்தரலிங்கம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இருந்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு

திரு. ரீ. தர்மலிங்கம் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் இருந்து கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு.

திருமதி எம். துரைசிங்கம் பூநகரி மகாவித்தியாலயத்தில் இருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு.

## நெல்லியடி கோட்டக் கல்விப் பிரதேசம்

(உடுப்பிட்டி, பருத்தித்துறை வட்டாரங்கள்)

திரு. ஜே. குலசிங்கம் கொழும்பு வெள்ளவத்தை அ.த.க. பாடசாலையிலிருந்து யாழ்.நெல்லியடி மெ.மி.த. க. பாடசாலைக்கு.

திரு. நி. ஸ்ரீசெல்வராசா கண்டி அசுகிரிய மகாவித்தியாலயத்திலிருந்து யாழ்.அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திற்கு.

திருமதி எஸ். நவசிவாயம் நுவரெலியா பொனுகலோ த. வித்தியாலயத்திலிருந்து யாழ் கரவெட்டி பாணிக்க வாசர் வித்தியாலயத்திற்கு.

திருமதி எஸ். சதாசிவம் பண்டாரவளை த.க.பாடசாலையிலிருந்து யாழ் புற்றளை ம. வித்தியாலயத்திற்கு.

திரு.ரீ சிவநாதன் இரத்தினபுரி த.மகாவித்தியாலயத்திலிருந்து யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு.

திரு.வி.ஸ்ரீநாதன் புத்தளம் இந்து த. வித்தியாலயத்திலிருந்து யாழ்.கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலைக்கு.

திரு. ரீ.நடராசா திருகோணமலை பாலையூற்று அ.த.க. பாடசாலையிலிருந்து யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலைக்கு.

திரு.எ. ஈஸ்வரதாசன் திருகோணமலை கலைமகள் வித்தியாலயத்திலிருந்து யாழ். நாவலர்மடம் அ.த.க. பாடசாலைக்கும், யாழ். வேதாரணியேசுவரர்வித்தியாலயத்திற்கும்

திருமதி ஜே. கந்தசாமி முல்லைத்தீவு யோகபுரம் ம. வித்தியாலயத்திலிருந்து யாழ்.வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்திற்கு.

செல்வி எம். நடராசா முல்லைத்தீவு விசுவமடு 2ஆம் பகுதி அ.த.க. பாடசாலையிலிருந்து யாழ். நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திற்கு

திரு. எஸ். சத்தியவடிவேல் முல்லைத்தீவு மல்லாவி ம. வித்தியாலயத்திலிருந்து யாழ். கம்பர்மலை அ.த.க. வித்தியாலயத்திற்கு.

திரு வி நேசரத்தினம் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலிருந்து யாழ். தேவரையாளி இ.க. பாடசாலைக்கு

செல்வி எஸ் ஜெயக்குமாரி முல்லைத்தீவு முள்ளியவளை ம.வித்தியாலயத்திலிருந்து யாழ். நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திற்கு.

திரு.ஏ. நவரத்தினராசா முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து யாழ். மேலைப்புலோலி சைவப்பிரகாசவித்தியாலயத்திற்கு.

திருமதி ஆர். கே. யோசேப் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ம.வித்தியாலயத்திலிருந்து யாழ். விக்னேஸ்வராக் கல்லூரிக்கு.

திருமதி ஸ்ரீ. ஹேயானந்தன் முல்லைத்தீவு மல்லாவி ம.வித்தியாலயத்திலிருந்து யாழ்.பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலைக்கு.

திருமதி எம். கந்தசாமி முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ம வித்தியாலயத்திலிருந்து யாழ் யாக்கரு விநாயகர் வித்தியாலயத்திற்கு.

செல்வி வி பொன்னையா வவுனியா கோவிற் புதுக்குளம் அ. க வித்தியாலயத்திலிருந்து யாழ். விக்னேஸ்வராக் கல்லூரிக்கு.

திரு.எஸ். பத்மநாதன் வவுனியா கொந்தக்காரகுளம் அ. த. க. பாடசாலையிலிருந்து யாழ் முனை றோ.க த.க பாடசாலைக்கு.

திரு. எ. விநாயகமூர்த்தி வவுனியா குளரிசுட்டான் அ.த. பாடசாலையிலிருந்து யாழ்.விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு.

திரு. எஸ். நற்குணலிங்கம் வவுனியாம.வித்தியாலயத்திலிருந்து யாழ் சரணவாய் மகா வித்தியாலயத்திற்கு

திரு. என் இரகுநாதன் வவுனியா பண்டாரிக்குளம் வித்தியாலயத்திலிருந்து யாழ். தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலைக்கும், யாழ். மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு.

திரு பி. செல்வநாயகம் வவுனியா கனகராயன்குளம் ம. வித்தியாலயத்திலிருந்து யாழ். அல்வாய் வடக்கு றோ. க. த. பாடசாலைக்கு.

திரு. கே.இராமஜெயர் கிளிநொச்சி இயக்கச்சி அ.த.க. பாடசாலையிலிருந்து யாழ். நெல்லியடி ம.ம. வித்தியாலயத்திற்கு.

திருமதி டி.பாலசிங்கம் கிளிநொச்சி கனகபுரம் வித்தியாலயத்திலிருந்து யாழ். ஹாட்லிக் கல்லூரிக்கு.

திருமதி ஆர். சிவபாதசுந்தரம் கிளிநொச்சி முருகானந்த ம. வித்தியாலயத்திலிருந்து யாழ்.தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு.

திரு. ரி. மகாதேவன் அநுராதபுரம் செக்கிராவ முஸ்லிம் வித்தியாலயத்திலிருந்து யாழ். கொற்றாவத்தை அ. மி. த. க. பாடசாலைக்கும், யாழ். கெருடாவில் அ.மி.த.க.பாடசாலைக்கும்

செல்வி வி. ஆறுமுகம் திருகோணமலை மெ. ம. ஆ. பாடசாலையிலிருந்து யாழ் ஹாட்லிக்கல்லூரிக்கு.

திரு. எஸ். ஞானேந்திரன் கிளிநொச்சி ம. வித்தியாலயத்திலிருந்து யாழ்.ஹாட்லிக் கல்லூரிக்கு.

## வட்டுக்கோட்டை கல்வி வட்டாரம்:

திரு. ஏ சுகிர்தகுணசீலன் மாத்தளை மண்டாவேலை த. வித்தியாலயத்திலிருந்து யாழ். சுழிபுரம் வடக்கு வித்தியாலயத்திற்கும். யாழ். வியாவில் சைவவித்தியாலயத்திற்கும்.

திரு ஆண்டியய்யா நுவரெலியா கொனப்பிட்டிய த. வித்தியாலயத்திலிருந்து, யாழ். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு.

திருமதி எஸ். கந்தையா பதுளை பாக்றூா அ. த. க. பாடசாலையிலிருந்து யாழ். சித்தங்கேணி கணேஷ வித்தியாலயத்திற்கு

திரு ஐ. நடராசா கல்முனை அ. மனர் ம. வித்தியாலயத்திலிருந்து யாழ்.சலநிதி தியாகராசா ம. ம வித்தியாலயத்திற்கு

திருமதி எஸ் தேவநாயகம் மட்டக்களப்பு கிரான் ம. வித்தியாலயத்திலிருந்து யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு.

திருமதி ஜே. சுப்பிரமணியம் திருகோணமலை செல்வநாயகபுரம் அ. த. க. வித்தியாலயத்திலிருந்து யாழ் சலநிதி தியாகராசா ம. ம. வித்தியாலயத்திற்கு.

திருமதி எல். குணசிங்கம் முல்லைத்தீவு செம்மலை ம. வித்தியாலயத்திலிருந்து யாழ். பண்ணாகம் வடக்கு அ.மி. த. க. பாடசாலைக்கு.

திரு. கே கனகலிங்கம் முல்லைத்தீவு யோகபுரம் ம. வித்தியாலத்திலிருந்து யாழ். தொல்புரம் அ. த. க. பாடசாலைக்கு.

திருமதி பி. இராசதுரை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலிருந்து யாழ். பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரிக்கு.

திரு. பி. இசிதோர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ. க பாடசாலையிலிருந்து யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு

திருமதி ஏ. சுப்பிரமணியம் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்திலிருந்து யாழ் சுளிபுரம் ஆறுமுக வித்தியாலயத்திற்கு

திரு. எம் செல்வராசா. வவுனியா பூவரசங்குளம் ம. வித்தியாலயத்திலிருந்து யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு

திரு கே. சிவராசா மன்னார் ஊற்றுநாயன்குளம் றோ. க பாடசாலையிலிருந்து யாழ். பிராம்பத்தை கலைமகள் வித்தியாலயத்திற்கு

திரு ஜே ஜெகநாதன் கிளிநொச்சி ம வித்தியாலயத்திலிருந்து யாழ். காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்திற்கு

திரு ரி. குணதிலகம் கிளிநொச்சி முருகானந்த வித்தியாலயத்திலிருந்து யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு.

## காங்கேசன்துறை கல்வி வட்டாரம்:

திரு கே. எஸ். கே சம்பந்தர் ஹோமகம புனித மரியாள் மகாவித்தியாலத்தில் இருந்து யாழ். சதானந்த வித்தியாலயம் -3நாள், அளவெட்டி அருணசலம் வித்தியாலயம் 2 நாள்,

திருமதி ஆர். சிவலிங்கம் நுவரெலியா புல்மாஸ்ரன் தமிழ் வித்தியாலயத்தில் இருந்து சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்திற்கு.

திரு. சி. சிவராஜசிங்கம் நுவரெலியா கற்றபொல தமிழ் வித்தியாலத்திலிருந்து கட்டுவன்புலம் தமிழ் வித்தியாலயத்திற்கு.

திருமதி சி. சண்முகநாதன் நுவரெலியா நல்லாயர் கன்னிமடத்தில் இருந்து தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு.

திரு. சி. பாலகிருஷ்ணன் நுவரெலியா நுஓய தமிழ் வித்தியாலயத்தில் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு.

...5 ஆம் பக்கம் பார்க்க

# வாசப் பொழுது

''பள்ளி மாணவர்களே!

ஒரு காலத்தில் எமது தேசத்திற்குத் தேவையான மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டவல்லுநர்கள், கணக்காளர்கள், என்று கல்விமான்களை வாரிவழங்கிய யாழ்ப்பாணம் இன்று இருண்ட ஆபிரிக்காவாக மாறிவருகின்றது. பயங்கரவாதிகளே இதற்குக் காரணம்!''

இப்படியாக ஹெலிகப்டர் வீசிய பிரசுர மொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மாணவர்களுக்காக ராணுவம் வடிக்கும் கண்ணீரே இப்பிரசுரம்.

இந்தப் பிரசுரத்தைத் தயாரித்தவர் கொழும்பில் நிரந்தரவாசம் செய்யும் 'கல்விக் கலாநிதி' ஒருவர் என்று கூறப்படுகின்றது.

அரசாங்கத்தின் ஓரவஞ்சமான தரப்படுத்தலால்தான் தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக வாசல் மூடப்பட்டது என்பதையும், அதுவே இன்றைய தமிழ் மாணவர் போராட்டத்தின் ஆரம்பக் கட்டம் என்பதையும் இந்த மூளையில்லாத கலாநிதிக்குத் தெரியாதிருப்பது எமக்கு வேதனையைத் தருகின்றது.

இந்தக் கலாநிதியின் நாடகக் கோஷ்டிக்கு சீன் இழுக்கும் யாழ்ப்பாணத்துச் சட்டம்பிகளாவது அவருக்கு உண்மையை எடுத்துக்கூறக் கூடாதா?

❀ உக்கிரன்

## இன்றைய பலன்

**மேடம்:** இனசன மகிழ்ச்சி, தொழிற் பேறு, பெரியோர் உதவி, கல்வியால் சிறப்பு, சகோதரர் வரவு, தனதானிய விருத்தி.

**இடபம்:** பிதாவழி உதவி, பணவரவு, தொழிலால் மேன்மை, வெளியூர் போனவர் வருகை, காதலில் வெற்றி, பூமிப்பேறு.

**மிதுனம்:** எடுத்த காரியம் தடை, தொழிலால் பிணக்கு, உடலில் ரோகம், குடும்பப் பகை, தடுமாற்றம், யோசனை மிகுதி.

**கடகம்:** சகல காரியங்களிலும் சித்தி, கல்வியால் கீர்த்தி செல்வாக்கு அதிகரிக்கும், பதவி உயர்வு, ஆயுதபயம்.

**சிங்கம்:** சத்துரு ஜெயம், வாக்கு வசீகரம், மாமன்வழிப் பகை, தனநஷ்டம், வாகன மாற்றம், பிரயாணத்தடை.

**கன்னி:** புத்திரரால் உதவி, கல்வியால் சிறப்பு குடும்ப கௌரவம், நல்லோர் ஆசி, நண்பர்களால் மேன்மை.

**துலாம்:** வாகன நஷ்டம், பூமியால் பிணக்கு, வீண்பழி கேட்டல், இடமாற்றம், நினைத்தகாரியம் தடை.

**விருச்சிகம்:** நீண்டநாள் பகை நீங்கும், தடைப்பட்ட தொழில் விருத்தி, சகோதரரால் நன்மை, அயரா முயற்சி,

**தனுசு:** பணவரவு, சகோதரர் வழியில் விவாகம், ஆயுத பீடை, சோரபயம், நண்பர்கள் வருகை, தொழில் மந்தம்.

**மகரம்:** கணவன் மனைவியிடையே பிணக்கு, இலாபகரமான தொழில், இடப்பிரிவு புத்திரசுகம், பூமிப் பேறு.

**கும்பம்:** வீண்பழி கேட்டல், செய்தொழிலால் நட்டம், நீண்ட நாள் உறவில் பகை, வியாபாரக் கேடு.

**மீனம்:** செல்லிடமெல்லாம் சிறப்பு, புத்திரபாசம், வீண் பகை, குடும்பச் செல்வாக்கு, வாக்கு வசீகரம்.

★ யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

### அரசாங்கத்தின் .

...3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் ஒன்றின்போது இரு பெரும் கட்சிகளும் மிக நெருங்கிய அளவு வாக்குகளையே ஈட்டிக்கொள்ளக்கூடியனவாக இருக்கும்.

(நாளை தொடரும்)

தென் ஆபிரிக்க விடுதலை இயக்க தலைவி

# திருமதி மண்டெலாவுக்கு 'தங்கப்புறா' கௌரவ விருது

(லண்டன்)

தென் ஆபிரிக்க விடுதலை இயக்கத் தலைவி திருமதி வினி மண்டெலாவுக்கு இந்த ஆண்டின் ''தங்கப் புறா'' விருது வழங்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க இனவெறி ஆட்சிக்கு எதிராக அயராது போராடி வரும் திருமதி மண்டெலாவின் அரும்பணிகளைச் கௌரவித்தே இந்தவிருது அவருக்கு வழங்கப்படுகிறது.

ஐ.நா. சமாதான ஆண்டையொட்டி இத்தாலி படைக் குறைப்புக் கழகமும், கூட்டுறவு லீக்கும் இந்த விருதுத் திட்டத்தை கூட்டாக நிறுவியிருந்தன.

திருமதி மண்டெலாவுக்கு பிரிட்டோரியா அரசு விஸா வழங்க மறுத்துவிட்டதால் அவரது சார்பில் பிரபல பாடகர் ஹரி பெலபான்டே இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை ஸிம்பாப்வே பிரதமர் ரெபேட் முகாபேக்கும் எத்தியோப்பியா மிக உயர்ந்த விருது வழங்கி கௌரவித்துள்ளது. நேற்று முன் தினம் இந்த விருது முகாபேக்கு வழங்கப்பட்டது.

தென் ஆபிரிக்க விடுதலைப் போராட்டத்தில் அவர்கொண்டுள்ள பற்றுறுதியையும் ஆற்றிவரும் பங்களிப்புகளையும் கௌரவிப்பதற்காகவே இந்த விருது அவருக்கு வழங்கப் பட்டுள்ளது,

பிலிப்பைன்ஸ் தேர்தலில்

## எதிர்பார்த்ததை விடவும் எதிரணி முன்னேற்றம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் செனட் சபைக்கும் பொது மக்கள் சபைக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர்களும் எதிர்க்கட்சி வேட்பாளர்களும் சமநிலையிலுள்ளதாக மணிலா செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செனட் தேர்தலில் இரு தரப்பிலும் தலா பன்னிரண்டு பேர் முன்னணியில் நிற்பதாக அதிகார பூர்வ வாக்கு எண்ணிக்கை தெரிவிப்பதாகவும் அந்த செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மொத்தமுள்ள வாக்குச் சாவடிகளில் நான்கு சாவடிகளின் முடிவையே இது காட்டுவதாகவும், எதிர்க்கட்சியின் செல்வாக்கு வலுவடைந்துள்ள வடக்குத் தீவுகளிலிருந்தே இந்த முடிவுகள் வந்ததாகவும் அந்தச் செய்திகள் சுட்டிக் காட்டியுள்ளன.

## பெருவில் வேலை நிறுத்தம்

(லீமா)

பெருநாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தம் முடிவுக்கு வரும் அறிகுறிகள் எதுவும் இல்லாதிருப்பதால் தலைநகர் லீமாவின் வீதிகளில் இராணுவ ரோந்து தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

கூடுதலான சம்பள உயர்ச்சி வழங்கப்பட வேண்டும் எனவும் வேலை நிலைமைகள் திருத்தமடைய வேண்டும் எனவும் கோரி பொலிஸ் உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### யாழ்ப்பாண..

...4ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு. எஸ் விஜயநாதன் திருமலை மேற்கு தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்து கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு.

திரு. பி. சண்முகதேவன் மல்லாவி மகா வித்தியாலயத்தில் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு.

திரு. எம். சொர்ணலிங்கம் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் இருந்து யாழ். கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்திற்கு.

திரு. ரி. கதிர்காமநாதன் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் இருந்து யாழ். இளவாலை சென். ஹென்றி கல்லூரிக்கு.

திரு. எம். தங்கேஸ்வரன் வவுனியா நெடுங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து தெல்லிப்பழை வீமன்காமம் மகாவித்தியாலயத்திற்கு.

திருமதி எம். பிரபுதேவன் வவுனியா புளியங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து யாழ். பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலைக்கு.

திருமதி ஆர். சி. வின்ஸ்லோமன் முருங்கன் மகாவித்தியாலயத்திலிருந்து யாழ். மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு.

திருமதி எஸ். குழந்தைவேலு கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலிருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு

திரு கே மயில்வாகனம் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு

செல்வி எம். செல்லையா கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்திலிருந்து அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கு.

திருமதி எஸ். சச்சிதானந்ததாஸ் கிளிநொச்சி சென். தெரேசா மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்திற்கு.

செல்வி கே. வேலுப்பிள்ளை கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலிருந்து அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கு.

திரு. எம். நடராசா பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலிருந்து மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு.

திரு. கே. மகேந்திரன் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலிருந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு.

செல்வி எஸ். விசாலாட்சி கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்திலிருந்து தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்திசாலைக்கு.

### வேலணை புங்குடுதீவு கல்வி வட்டாரம்

திருமதி என். வைத்திலிங்கம் நுவரேலியா சாந்தகிறியாட் மகாவித்தியாலயத்தில் இருந்து மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு

செல்வி எஸ். வேலுப்பிள்ளை திருகோணமலை அல்பத்தா மகாவித்தியாலயத்தில்இருநது கரம்பன் சண்முகானந்த வித்தியாலயத்திற்கு.

திரு. கே. திருநாவுக்கரசு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகாவிததியாலயத்தில் இருந்து புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு.

செல்வி என். தம்பிராசா வவுனியா பாவற்குளம் இல. 2, இல. 1 மகாவிததியாலயத்தில் இருந்து நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு.

திருமதி ரி. சத்தியநாதன் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் இருந்து வேலணை சேர்வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயத்திற்கு.

திரு.வி. சுப்பிரமணியம் கிளிநொச்சி பரந்தன் மகாவித்தியாலயத்தில் இருந்து நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு.

திரு. கே. கணேஷமூர்த்தி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இருந்து அனலைதீவு சதாசிவ வித்தியாலயத்திற்கு.

### மானிப்பாய் கல்வி வட்டாரம்

திரு. எஸ். வீரேந்திரன் நுவரெலியமேல்கிறன்லி தமிழ் வித்தியாலயத்திலிருந்துஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திற்கு

திரு. ஏ. சண்முகநாதன் நுவரெலியாமேல்பீல்ட் தமிழ் வித்தியாலயத்திலிருந்து இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலைக்கு.

திரு. சி. உதயபாலன் கேகாலை ஹரகிரா கல்லூரியிலிருந்து மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு.

செல்வி எஸ். செல்லையா பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து ஏழாலை சைவமகாஜன வித்தியாசாலைக்கு.

திரு. எஸ். நாகலிங்கம் இரத்தினபுரி ஒப்பாத்தா இல. 3 அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிந்து நவாலி அட்டஹிரி வித்தியாசாலைக்கு

திரு. ஆர். இந்திரன் இரத்தினபுரி/ மாதம்பை இல 2. தமிழ் வித்தியாலத்திலிருந்து உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்திற்கு.

திரு. ஆர். ஆனந்த நடராசா இரத்தினபுரி தமிழ் வித்தியாலயத்திலிருந்து சுதுமலை சிம்யபாரதி வித்தியாலயத்திற்கு.

திருமதி எஸ். குலேந்திரராசா பொத்துவில் தமிழ் வித்தியாலயத்திலிருந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு.

திரு. சி. ஆறுமுகராசா வாழைச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்திலிருந்து மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு

திரு. எஸ். ஈஸ்வரசர்மா மட்டக்களப்பு மெதடிஸ்ற் மகளிர் கல்லூரியிலிருந்து சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலைக்கு.

திருமதி ஆர். செல்லத்துரை மட்டுநகர் கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலைக்கு.

திருமதி கே. இராசக்கோன் திருமலை சென். பிரான்சிஸ் சேவியர் மகாவித்தியாலயத்திலிருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு.

திருமதி ஜீ. ஏ. இராசரத்தினம் திருமலை மெதடிஸ்ற் பெண்கள் பாடசாலையிலிருந்து மானிப்பாய் புனித அன்னம்மாள் வித்தியாசாலைக்கு.

திருமதி என். குணநாதன் திருமலை அல்மனுர் மகளிர் மகா வித்தியாலயத்திலிருந்து யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்திற்கு

திருமதி கே. நமநாதன் முல்லைத்தீவு குமுழமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து சுன்னாகம் மயிலணி வித்தியாசாலைக்கு.

திருமதி என். சிவநாதன் முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு.

திரு. எஸ். மகாலிங்கம் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியிலிருந்து ஏழாலை மகாவிததியாலயத்திற்கு.

செல்வி ஜே. துரைராசா ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலிருந்து ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு

திரு. எஸ் நாகமணி மாங்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு.

திரு. ஐ. பாலசிங்கம் வவுனியா தாண்டிக்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு.

திரு. ஆர். இராசேந்திரம் வவுனியா பாவற்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலைக்கு.

திருமதி வி. இராசலிங்கம் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்திலிருந்து சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்திற்கு.

திருமதி பி. செல்வநாயகம் பளை மகா வித்தியாலயத்திலிருந்து யாழ். சின்மய பாரதி மகாவித்தியாலயத்திற்கு.

திரு. கே. ஜெகநாதன் பூநகரி மகா வித்தியாலயத்திலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு.

திரு. எஸ். சோமலிங்கம் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்திலிருந்து சுதுமலை வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு.

18-05-1987 திங்கட்கிழமை

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

# கொழும்பு குண்டு வெடிப்புகள்

# தமிழ் இளைஞர்கள் இருபது பேருக்கு எதிராக வழக்கு!

கொழும்பிலும் அதன் அயல் பிரதேசங்களிலும் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக ஈரோஸ் உறுப்பினர்கள் என்று கூறப்படும் இருபது பேருக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளோரில் 18 பேரின் பெயர் விபரம் இரகசிய பொலிசாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னையா கனகசபை [சபாரத்தினம் அல்லது ஹென்றி என்று அழைக்கப்படுபவர்], எஸ். சயானந்தன், எஸ் மகானந்தன், கே. கணபதிப்பிள்ளை, வி. சுந்தரம்' எஸ்.ராஜரட்ணம், ரி. நாகேஸ்வரன், ஜோன்ஸன் ஜோசப், ஈ.பஞ்சலிங்கம், ரி. சாம்பசிவம், பத்மநாதன் லவன், ரி. ரவீந்திரன், சி. தர்மபால, ரி வேலுப்பிள்ளை அல்போன்ஸோ கரலிதாஸன் [ஜுலி]. டபிள்யூ. ரட்ணராஜா [பிரிட்டோ], துரைசிங்கம் ஸ்ரீ ரங்கநாதன், வரதலிங்கம் ஜெயகுமார், ரி. ரவீந்திரன்.

கொழும்பில் இடம்பெற்ற பதின்மூன்று குண்டுவெடிப்புகளில் ஹென்றி சம்பந்தப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அண்மைய புறக்கோட்டைக் குண்டு வெடிப்பு இத்துடன் சம்பந்தப்படவில்லை.

## வேலைதேடி மாலைதீவு சென்ற 4 தமிழ் இளைஞர் ஏமாந்தனர்!

(நாயன்மார்கட்டு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரினூல் மாலைதீவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட யாழ்ப்பாணப்பகுதி இளைஞர்கள் நால்வர் முகவர் குறிப்பிட்ட வேலையோ, சம்பளமோ இல்லாததினால் நாடு திரும்பினார்கள்.

கொக்குவிலைச்சேர்ந்த பெண் முகவர் ஒருவரால் இவர்கள் மாலைதீவுக்கு அனுப்பப்பட்டு இம்மாதம் பத்தாம் திகதி நாடு திரும்பினர். தலா பதினையாயிரம் ரூபாவை இவர்கள் முகவருக்கு கொடுத்தனராம்.

இதேபோல கடந்த சில தினங்களுக்கு முன்னரும் சில வடபகுதி இளைஞர்கள் மாலைதீவு விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனராம்.

இதே வேளை கொழும்பில் உள்ள முகவர் நிலையம் ஒன்றின் பெயரில் வடபகுதியில் கிளை இயங்குவதாக வந்த தகவல்களை அந்த முகவர் நிலையம் மறுத்து அறிவித்துள்ளது.

# முக்கியமான சில செய்திகள்

### சங்கீத சபை செய்முறைப் பரீட்சை

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற செய்முறைப் பரீட்சைக்கு அனுமதிப்பத்திரம் பெற்றும் தோற்ற முடியாதிருந்த பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை இம் மாதம் 30 ந் திகதி சனிக்கிழமையும் 31 ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இந்து மகளிர் கல்லூரியில் காலை 8-30 மணி முதல் பி.ப 4.00மணிவரை நடத்தத்தீர்மானித்திருப்பதால் முன்னர் விண்ணப்பித்துப் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகள் இம் மாதம் 23 ந் திகதிக்கு முன்னர் யாழ்.கல்வித் திணைக்களத்திலுள்ள வ. இ. சங்கீத சபை நிர்வாக அதிகாரிக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### சைக்கிள் திருடன் பிடிபட்டான்

(எழுதுமட்டுவாள்)

சாவகச்சேரி பொது நூலகத்திற்கு முன்பாக நிறுத்திய தனது சைக்கிளை களவாடிச் செல்வதைக்கண்ட பாடசாலை மாணவன் சைக்கிள் திருடனை துரத்திச் சென்று பிடித்த சம்பவம்நேற்று சாவகச்சேரியில் நடந்தது.பிடிக்கப்பட்ட சைக்கிள் திருடன் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட பின்னர் இளைஞர் குழுவிடம் ஒப்படைகக்கப்பட்டுள்ளார்.

### இருபத்தொரு கண்ணி வெடிகள் மீட்பு

பரந்தன் இரசாயனத்தொழிற்சாலைக்கு முன்னால் வீதியில புதைத்து வைக்கப்பட்டிருந்த இருபத்தி ஒரு கண்ணி வெடிகள் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது இந்த கண்ணி வெடிகள் ஒவ்வொன்றும் 50 கிலோ நிறையுடையவையாம்.

### யாழ்ப்பாணத்...

வத்தனர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதினால் வாகனப் போக்குவரத்துக்கள் அதன்பின்னர் முற்றாக தடைப்பட்டன. இதனால் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டுச்சென்ற போக்குவரத்துச்சபை பஸ்கள், தனியார் பஸ்கள் என்பன மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிவந்தன. கொழும்பு நோக்கிப் புறப்பட்டபல லொறிகள் பளை, கொடிகாமம் பகுதிகளில் தங்கியுள்ளன.

### இன்று..

வேண்டுமென இலங்கை அமைச்சர்கள் தெரிவித்திருந்ததே இப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முக்கிய காரணம் எனவும் டில்லி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### மத்திய கல்லூரி பழைய மாணவர் தீர்மானம்

யாழ். மத்திய கல்லூரி தொடர்ந்தும் இதே இடத்தில் இயங்கி தனது கல்விப்பணியை ஆற்ற வேண்டும் எனவும். இதற்கான சகல உதவிகளையும் பாதுகாப்புகளையும் கல்விப் பணிப்பாளர் பெற்றுத்தரவேண்டும் எனவும் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாக சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இத்தீர்மானத்தின் பிரதிகள் கல்விப்பணிப்பாளர் அரசாங்க அதிபர், கல்வி அமைச்சர், பந்தோபஸ்து அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டது.

### சூடுபட்டு கலீல் மரணம்

பளை பகுதியில் ஹெலிகொப்டர்கள் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதல்களின் போது படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முல்லைத்தீவைச் சேர்ந்த பஸ் சாரதியான கலீல் (35) என்பவர் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

### பிஜித்தீவில் மக்கள் எதிர்ப்பு அணி

பிஜித்தீவில் நான்கு நாட்களுக்கு முன் அமைக்கப்பட்ட இராணுவ அரச நிர்வாகம் சட்ட விரோதமானது, செல்லுபடியற்றது என அந்த நாட்டின் நீதிபரிபாலனத் துறை அறிவித்துள்ளது. இதே வேளை புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ அமைச்சர் மன்றத்தை அங்கீகரிக்க பிஜியின் மகாதேசாதிபதி மறுப்புத் தெரிவித்துள்ளார். இராணுவ ஆட்சியை எதிர்த்து அங்குள்ள மக்கள் பெருமளவில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டபோது பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதினால் ஒருவர் காயமடைந்தார். ஜனநாயக அரசை நிர்மூலமாக்கி இராணுவ அரசு அமைக்கப்பட்டதினை அவுஸ்திரேலிய பிரதமமந்திரி, எலிஸபத் மகராணி ஆகியோரும் கண்டித்துள்ளனர்.

### மீண்டும்....

போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டு அதை இலங்கை கடைப்பிடிக்குமாறு இந்தியா கண்காணிக்க வேண்டுமெனவும் சொன்ன திரு. அமிர்தலிங்கம், டிசெம்பர் 19 ஆம் திகதிய யோசனைகள் தொடர்பாக மத்திய அரசு அதிகாரிகளுடன் மனந்திறந்து பேசவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### கோட்டை...

மானதாகவும், இச்சம்பவத்தில் மற்றொருசிப்பாய் காயமடைந்ததாகவும் அரசு நேற்றிரவு அறிவித்தது.

துரையப்பா ஸ்ரேடியசென்றி ஏற்கனவே மூடப்பட்டது தெரிந்ததே.

### ஈ பி. ஆர் எல் எவ்.

கள் தெரிவித்ததாக சென்னையிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எப் ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த குழுவினர் 'ஜனநாயக முன்னணி' என்ற பெயரிலும் '3 ஸ்ரார்' என்ற பெயரிலும் ஆரம்பித்த இயக்கங்கள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்தே இப்புதிய கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

சமூக விரோத செயல்கள் காரணமாக விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்ட இம் மூன்று இயக்கங்களும் உட்பிரச்சினை காரணமாக பல்வேறு குழுக்களாக தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இக் குழுமோதல்களே இணைப்புக்கு பிரதான தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ராணுவ...

வாங்க உள்ளது. ஆப்கானிஸ்தான் போர் விமானங்களின் தாக்குதல்களை முறியடிக்கவும், அவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் இத்தகைய நவீன போர் விமானங்கள் அவசியம் தேவைப்படுவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது விமானங்களைக் கொள்வனவு செய்வதுதொடர்பான பேச்சுக்களை நடாத்துவதற்காக பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் ஜாகுல்கான் வாஷிங்டனுக்கு நேற்று பயணமானார்.

### ஹெலிகப்டரின்...

டிருந்த லொறி மீதும் அருகிலிருந்த வீட்டின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

குறைந்த செலவில் வீடமைப்புப் போட்டியில் தெரிவான வீட்டைப்பார்வையிட புலோப்பளை அறத்திநகர் குடியேற்றத்திற்குச் சென்ற பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலக உத்தியோகத்தரும் புலோப்பளை பகுதி விசேட சேவை அலுவலரும் இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மயிரிழையில் உயிர் தப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜே. வி. பிக்கு...

1982ஆம் ஆண்டில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் பழமை வாய்ந்த இடதுசாரிகட்சிகளை விட மக்கள் விடுதலை முன்னணிக்கு அதிக வாக்குகள் கிடைத்ததையும் பிரேமதாச இக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

### 27 ஆம் திகதி...

தொழில் நுட்பவியல் சான்றிதழ்' கற்கை நெறியினைப் பயில விரும்பும் மாணவர்களிடம் இருந்து அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக் கற்கை நெறியினைப் பயில விரும்புவோர் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் அமைந்திருக்கும் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்துடன் நேரடியாகதொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பபத்திர விநியோக கடைசித் திகதி இம் மாதம் 27 ஆம் திகதியாகும்.

## காலமானார்

### ஐ. இரத்தினசாமிக் குருக்கள்

நல்லூர் மனோன்மணி அம்மன் கோவில் பிரதமகுருவும். நல்லூர் அத்தியடி பிள்ளையார் கோவில் பிரதம குருவுமாகிய பிரம்ம ஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் இரத்தினசாமிக் குருக்கள் காலமாகிவிட்டார். இவர் கமலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகாமசௌந்தரி, சண்முகநாதசர்மா, [சுப்பிரமணியம் - மருந்துக்கடை, யாழ்ப்பாணம்], உருத்திரதாசசர்மா [நல்லை முருகன் கோவில்], சாரதாம்பாள், சுசிலாதேவி, மனோன்மணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியக் குருக்கள் [அராலி சிவன் கோவில்], யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் சிவகணேசசர்மா, ஸ்ரீ கோபாலசர்மா, கிரிசா, காயத்ரி, குகன், அபிராமி, சுபா ஆகியோரது அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-5-87 திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும். தயவு செய்து இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

05055

தகவல்:
இ. சண்முகநாத சர்மா

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 18-05-87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.